தென்னுபிரிக்காவைவிட இலங்கையில் நிலைமை மோசம்; பாரதம் மௌனம் சாதிக்கக்கூடாது!

கூட்டணியின் வேண்டுகோள்

(சென்னை)

திருமலையில் பாதுகாப்புப் படையினரி புரிந்துள்ள அட்டூழியங்கள் குறித்து தாம் அதிர்ச்சியும் திகிலும் அடைந்துள்ளதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல்பீடம் சென்னையில் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இக்கொலைகள் சம்பந்தமான மாஜிஸ்ரேட் விசாரணைக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ள போதிலும் இது வெறும் கண் துடைப்பே எனவும், ஏனெனில் இவ் விசாரணையின் போது இராணுவத்தினர்தான் சாட்சியமாக இருப்பார்கள் எனவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது தென்னுபிரிக்காவிலும், மத்திய அமெரிக்காவிலும் நடைபெறுவதை விடக்கூடுதலாக இளம் அரசியல் கைதிகள் கொலை செய்யப்படுவது இங்கு அடிக்கடி நடைபெறுவதாகவும், இதற்கு எதிராக உலகமும், முக்கியமாக பாரதம் குரல் கொடுக்க வேண்டுமெனவும், இவற்றை அவை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது எனவும் கூட்டணி கேட்டுக் கொண்டுள்ளது. யுத்த நிறுத்த

...6ம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

சுடரொளி

முரசு 2 10-12-85செவ்வாய் (கார்த்திகை 25 ரபியு அவ் 27) முழக்கம் 305

முவர் கொல்லப்பட்டனராம்!

நாவற்குழிச் சம்பவங்கள் ஒருவருக்கு கூட்டுக்காயம்

நாவற்குழியில் நேற்று காலை முதல் குண்டு வெடிப்புச் சத்தங்களும், கூட்டுச் சத்துங்களும் தொடர்ச்சியாகக் கேட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது. சிறுடையினர் நடைபவனியாகவும், மினி வான்களிலும் நாவற்குழி சந்திவரையும் சென்றனர். அங்கு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்பகுதியிலுள்ள புதிய கட்டடங்களிலும் ஏறி நின்றனர். குண்டுகளை வீசியவர்களை சிறுடையினர் தேடிச் சென்றதாகவும் இதனால் துப்பாக்கிப்பிரயோகம் இடம் பெற்றதாகவும் தெரியவருகிறது.

...6ம் பக்கம் பார்க்க

லோகசபாவில் எம். பீக்கள்

தமிழர் மீதான வன்செயலை இலங்கை நிறுத்த வேண்டும்

(புதுடில்லி)

"இலங்கை அரசாங்கம் தொடர்பான பாரத அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் உடனடியாக மறுபரிசீலனை நடத்தப்படவேண்டும்."

நேற்று லோகசபாவில் பேசிய இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

தமிழர்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்செயல்களை இலங்கை அரசு நிறுத்த வேண்டுமென்று பல அங்கத்தவர்களும் இங்கு பேசுகையில் வேண்டுகோள் விடுத்தனர்.

இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படவேண்டுமெனவும் இவர்கள் மேலும் தெரிவித்தனர்.

ராணுவத்தை கட்டுப்படுத்துக; பாரத அரசு வேண்டுகோள்!

(புதுடில்லி)

இலங்கை அரசாங்கம் தனது ராணுவத்தினரைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்று பாரத அரசாங்கத்திலால் கேட்கப்பட்டுள்ளதாக நேற்று லோக சபாவில் பேசிய வெளிவிவகார அமைச்சர் திரு. பலிராம் பஹத் தெரிவித்தார். சகல தரப்பிலும் வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டுமென்றும் தெரிவித்த அமைச்சர், ராணுவ நடவடிக்கைகளை பாரதம் முழுமையாக எதிர்ப்பதாகக் குறிப்பிட்டதுடன், நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கு பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே தமிழர் பிரச்சினைக்குக் காணப்படவேண்டும் எனவும் இந்தியா வலியுறுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

★ ஒரு மொழி மாநில அமைப்பு' கேட்டுச் சமர்ப்பித்த

கூட்டணி யோசனை

இலங்கை எதிர்ப்பு

வடக்கு கிழக்கு இணைப்பு எந்த உருவில வந்தாலும் ஏற்கும் சாத்தியமில்லையாம்!

(கொழும்பு)

வடக்கு கிழக்கு இணைப்பு என்பது எந்த உருவத்தில் வந்தாலும் அதனை ஏற்பது சாத்தியமில்லை என்று கொழும்பின் அரசமட்ட உயர் பீடங்களில் நேற்று கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இதனால் தமிழர் கூட்டணியின் மாற்று யோசனை ஏற்கப்படமாட்டாது என்பதும் அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

கூட்டணியினரால் இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட மாற்றுயோசனை, இலங்கை ஜனாதிபதியிடம் டாக்காவில் வைத்து பாரதப் பிரதமரினால் வழங்கப்படுமென்று முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும், அவ்வாறு எதுவும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை எனவும் இதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கூட்டணியின் மாற்றுயோசனைகள் பற்றி நேற்றுக் காலையே கொழும்பு உயர் பீடத்துக்கு முதற்தடவையாகத் தெரியவந்ததாகவும் இவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஒரு மொழி மாநில அமைப்பு என்பதற்கும், வடக்குக் கிழக்கு இணைந்த தனி மாநில சபை என்பதற்கும் எந்த வேறுபாடும் காணப்படவில்லையெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதியின் 5 நாள் விஜயம்

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் முகம்மத் ஸியாஉல்

...6ம் பக்கம் பார்க்க

நாகர் கோவிலடியில் முகாம்?

பதினெட்டு வாகனத்தில் ராணுவம் பயணம்

(உடுப்பிட்டி)

வடமராட்சியிலுள்ள குடத்தனை நாகர்கோவில்

ஐந்து இளைஞர் நேற்று விடுதலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவத்தினரால் நேற்று முன்தினம்

... 6ம் பக்கம் பார்க்க

பகுதியில் தற்காலிக ஆயுதப் படை முகாம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பல்வேறு கனரக வாகனங்களிலும், லொறிகளிலும் பெருமளவு முட்கம்பிகளும், மரக்குற்றிகளும் பலத்த இராணுவக் காவலுடன் நேற்றுக்காலை இப் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஹெலிகப்டர் ஒன்றும் அப்பொழுது மிகவும் தாழ்வாகப் பறந்து இவற்றைக் கண்காணித்துக் கொண்டிருந்தது.

நேற்றுக் காலை சுமார் ஆறு மணியளவில் மண்டான், கல்லுண்டாய் வீதி வழியாக சோனப்புலம் ஆலயச்சந்தி வழியாக இப்பதினெட்டு இராணுவ கவச வாகனங்களும்,

... 6ம் பக்கம் பார்க்க

ராணுவ வாகனம் மோதி லொறிச்சாரதி படுகாயம்

ஆனையிறவு தபால் நிலையத்துக்கு அருகில் வீதியோரமாக நிறுத்தப்பட்ட லொறிமீது நேற்று அதிகாலை சீருடையினர் வந்த கனரக வாகனம் மோதியதால் அந்த லொறியின் சாரதியான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நா. சதாசிவம் (30) என்பவர் படுகாயங்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். லொறியும் பலத்த சேதமடைந்துள்ளது.

இந்த லொறி கிளிநொச்சிப் பகுதியில் இருந்து விறகு, தேங்காய் முதலியவற்றுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்த

... 6ம் பக்கம் பார்க்க

மட்டுநகர் வங்கியிலிருந்து 25 வள்ளங்கள் கொள்ளை

(மட்டுநகர்)

மட்டுநகர் இலங்கை வங்கிக் கிளையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இருபத்தைந்து மீன்பிடி வள்ளங்கள் இனம் தெரியாதவர்களால் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மீனவர்களுக்கு இந்தப் படகுகள் சொந்தமானவையாகும். ஆனால் அவர்கள் வங்கியில் எடுத்த கடனைத் திருப்பிச் செலுத்தாததால், அவர்களின் படகுகளை பறிமுதல் செய்து வங்கியில் வைத்திருந்த போதே கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது.

.. 6ம் பக்கம் பார்க்க

பல்கலைக்கழக மாணவரவை:

மனித உரிமை தினமானது தமிழருக்குத் துக்க தினமே

(யாழ்ப்பாணம்)

"தமிழீழப பகுதிகளில் நாளாந்தம் தமிழ்பேசும் மக்கள் கொடூரமான இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் இவ்வேளையில் மனித உரிமைகள் தினம் என்பதே தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரை அர்த்தமற்றதாகின்றது" என யாழ். பல்கலைக்கழக மாணவரவை அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும், "மனித உரிமைகளை நாளாந்தம் மீறிவரும் ஸ்ரீலங்கா அரசுதன்னை சமாதானவிரும்பியாக வெளியுலகிற்கு காட்ட முனை

—6ஆம் பக்கம் பார்க்க

தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் பத்திரிகை சுடரொளி

இடம் பெயர்ந்தோர் மாநாட்டில் தீர்மானம்

இந்தியா பிரச்சினைக்கு தீர்வு காணுவிடின் அகதிகளாகச் செல்வோர் அதிகரிப்பர்

(கோப்பாய் நிருபர் பி. குமாரசிங்கம்)

கடந்த மாதம் 28. 29. 30 ம் திகதிகளில் யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் தமிழ் மகளிர் அவை நடத்திய இடம் பெயர்ந்தோர் மாநாடு நடை பெற்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தங்கியிருக்கும் இருபத்திரெண்டாயிரம் அக திகள் சார்பாகவும் பல முக்கியமான தீர்மானங்கள் இங்கு எடுக்கப்பட்டன. இடம்பெயர்ந்தோர் நன்மை கருதி அவை இங்கு விபரமாகத் தரப்படுகின்றது:-

வன்செயல்கள் காரணமாக வெளிமாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாண மாவட்டப் பகு திகளுள் இடம்பெயர்ந்துவந்து, நண்பர்கள் வீடுகளிலும், உற வினர் வீடுகளிலும், ஆலயங் களிலும், அகதிகள் முகாம்களி லும் தங்கியிருக்கும் சகலருக் கும் அத்தியாவசிய நிவாரண உதவிகள் யாவும் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

அகதிகளுக்கு வழங்கப்படும் சகல நிவாரண உதவிகளும் எக் காரணம் கொண்டும் நிறுத்தப் படாமல் தொடர்ந்தும் வழங் கப்படுவதற்கு யாழ் அரசாங்க அதிபரால் உரிய நடவடிக்கை கள் எடுக்கப்பட வேண்டும். உதவி அரசாங்க அதிபர்களும், கிராமசேவை அலுவலர்களும் இதற்கு ஒத்துழைக்க வேண் டும்.

இடம் பெயர்ந்து வந்திருக் கும் அரசாங்க கூட்டுஸ்தாபன ஊழியர்கள் தமது பழைய இருப்பிடங்களுக்குச் சென்று வசிப்பதற்கான நிலைமை ஏற் படும் வரை யாழ். மாவட்டத் திற்குள்ளேயே அவர்களின் தொழில்களைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இடம் பெயர்ந்து வந்திருக் கும் கைத் தொழிற் பயிற்சி பெற்றவர்கள், தற்காலிகத் தொழில் வாய்ப்புப் பெறுவ தற்கு ஏற்ப சுய தொழில் முயற்சிகளைச் செய்து தரு மாறும், மற்றும் சுய தொழில் களில் ஈடுபட்டிருந்தோருக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொடுக்குமாறும் அரசாங்க அதிபரையும் சமூக சேவை நிறுவனங்களையும் கேட்பது.

இடம் பெயர்ந்து வந்திருப் போர் மீண்டும் தமது பழைய இருப்பிடங்களுக்குச் சென்று வசிப்பதற்கு ஏதுவாக, எரிக் கப்பட்ட வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும். தொழில் உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். பாதுகாப்பு வழங்க வேண்டும்.

மீண்டும் பழைய இடங்க ளுக்குச் சென்று வசிப்பதற் குரிய சுமுகமான சூழ்நிலை ஏற் படும்வரை எமது பிள்ளைகளின் கல்வி நிலை பாதிக்கப்படாமல் கல்வி கற்பதற்கான சகல தரத்திலான உதவிகளையும் செய்வதற்கு யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளரும், தொண்டர் நிறுவனங்களும் உதவிகள் வழங்க வேண்டும்.

கொழும்பு, மாத்தளை, கம் பளை, பூண்டுலோயா, பசறை, பதுளை, புசல்லாவ, கலஹா, கண்டி, ஹட்டன், தலவாக் கொல்லை, நுவரெலியா ஆகிய இடங்களிலிருந்து இடம் பெய ர்ந்து வந்திருப்போர் சாவகச் சேரி, கெற்பலி எனும் இடத் தில் தங்கியுள்ளனர். இவர் களுக்குத் தொழில் வாய்ப்புக் கிடைப்பதற்காகவும், ஏனைய வர்களுக்கு உதவும் பொருட் டும் அப்பகுதியில் ஒரு தும்புத் தொழிற்சாலை நிறுவித் தரு மாறும், பனம் பொருள் அபிவி ருத்திச் சபையையும், கிராமி யக கைத்தொழில் அமைச் சரையும் கேட்கின்றோம்.

அகதிமுகாம்களின் சுகாதார நிலைமைகளைக் கவனித்து வந்த யாழ், சுகாதாரத்திணைக் களத் தினருக்கும் ஏனைய தொண் டர் நிறுவனங்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன், தொடர்ந் தும் சுகாதார நிலைமைகள் சீராகக் கடைப் பிடிக்கப்படுவ தற்கு இவர்கள் மென்மேலும் ஆவன செய்ய வேண்டும்.

தமிழ் பேசும் மக்களைக் கொன்று குவிப்பதற்காகவும், கொள்ளைகள் நடத்துவதற்கா கவும், இருப்பிடங்களிலிருந்து துரத்துவதற்காகவும் விசேட மாக அமைக்கப்பட்ட ஊர்க் காவல் படையை உடனேயே வாபஸ் பெறவேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களின் எல்லைப் பகுதிகளில் குடியிருந் தோர் தமது பழைய இருப் பிடங்களுக்குச்சென்று வசித்து எமதுபிரதேசத்தைப்பாதுகாப் பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அரச பயங்கரவாதம் அதா டர்வதற்குக் காரணமாகச் செயல் புரியும் இராணுவத்தி னரினதும் ஊர்க்காவல் படை யினரினதும் அட்டூழியச் செய ல்களை நிறுத்துமாறு வேண்டிக் கொள்ள வேண்டும், இரா ணுவ ரோந்து நடவடிக்கைகளை நிறுத்தி அவர் களை முகாமுக்குள் அடக்கி வைக்குமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்களின் இன்றைய அரசியல் நெருக் கடிகளையும், அதனால் ஏற்பட் டுள்ள தாக்கங்களையும், இழப் புக்களையும் நேரடியாகக் கண்டு கொள்வதற்காக ஒரு குழுவை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையை இம் மாநாடு கேட் டுக் கொள்கிறது.

நடைபெற்ற வன் செயல்க ளின் நிமித்தம் உயிர்களைப்பறி கொடுத்தவர்களுக்கும், உட மைகள் இழந்தவர்களுக்கும் பூரணமான நஷ்டஈடு வழங்கு மாறு ஸ்ரீ லங்கா அரசாங்கத் தை கேட்டுக் கொள்கிறது.

இலங்கையின் ஆளும் அதி கார உரிமையை சிங்கள ஆளும் வர்க்கத்திடம் ஒப்ப டைத்த பிரிட்டிஷ் அரசாங்கம் தமிழ்ப் பேசும் மக்களுக்கான அரசியல் உரிமைகளை வழங்கு மாறு ஸ்ரீ லங்கா அரசை நிர்ப் பந்திக்க வேண்டுமென்று கேட்குமாறு இன்று இந்தியா வில் தஞ்சம் புகுந்திருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியி னரை கேட்பது.

இலங்கையில் இன்னல்பட்டு வரும் தமிழ்ப் பேசும் மக்களின் இன்றைய அவல நிலையைக் கருத்தில் கொண்டு இலங்கை யின் இனப்பிரச்சினைக்கு விரை வில் தீர்வு காண்பதற்கு இந்தி யா தவறுமானால் இந்தியா வுக்கு அகதிகளாக வருபவர்க ளின் எண்ணிக்கை அதிகமா கும். எனவே இப் பிரச்சினையில் விரைந்து தலையிட்டு நியாய மான தீர்வு ஏற்பட இந்தியா ஆவன செய்ய வேண்டும்.

தமிழ்ப் பேசும் மக்கள் இலங் கையில் அனுபவித்து வரும் கொடுமையான துன்பங்களை நேரடியாகக் கண்டு கொள்வ தற்காகவும், அகதிகளின் நிலை மைகளைப் புரிந்து கொள்வதற் காகவும் சர்வதேச செஞ்சிலு வைச் சங்கம் போன்ற தொண் டர் நிறுவனங்கள் இப் பகுதிக ளுக்கு நேரடியாக வருகை தர வேண்டும்.

வன் செயல்கள் தோன்றக் காரணமாகவுள்ள அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு சம்பந்தப் பட்ட சகலரும் தீவிர நடவடிக் கைகளை எடுக்க வேண்டும்.

வன்செயல்கள் நடைபெற்ற போது தமிழர்களின் உயிர்களை பாதுகாத்து உதவிய ஏனைய சமூக மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு இம் மா நாடு நன்றி தெரிவிப்பதுடன் மீண்டும் தமது இடங்களுக்குச் சென்று தமிழர்கள் பாது காப் பாக வாள்வதற்கு முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்க வேண் டும்.

தமிழ் மக்களின் சுதந்திர மான அரசியல் உரிமைக்கா கப் போராடி வரும் இயக்கங் கள் தமது போராட்ட நட வ டிக்கைகளைத் தீவிரப்படுத்து வதுடன், தமிழ்மக்களின் இந்த அகதி நிலைக்கான காரணங் களை மிக நுண்ணியமாக ஆராய்வதுடன் தமிழ் மக்க ளின் பாதுகாப்பையிட்டு மிகக் கவனமாகச் செயற்பட வேண் டும்.

வன்செயல்களின் நிமித்தம் உயிர் இழந்த தமிழ்ப் பேசும் பொது மக்களுக்கு இம்மாநாடு அஞ்சலியைத் தெரிவிப்பது டன், உயிர் துறந்த விடுத லைப் போராளிகள் அனைவருக் கும் இம் மாநாடு வீர வணக் கத்தைத் தெரிவித்துக் கொள் கிறது.

அ ர சா ங் க வன்செயல்க ளால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்களுக்குத் தேவையான நிவாரண உதவி கள் வழங்கிவரும் சர்வதேச தொண்டர்நிறுவனங்களுக்கும் இம்மாநாடு நன்றி தெரிவிப்ப டன், மென்மேலும் உதவிகள் வழங்கி ஒத்துழைக்க வேண் டும்.

பெறுபேறுகள் வெளியாகின

(புங்குடுதீவு)

யாழ் - ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் அண்மையில் க. பொ. த. ப. (சா. த) வகுப்பு மாணவர்க் கென நடத்திய தமிழ்மொழித் தேர்வின் பெறுபேறுகள் கட ந்த வார இறுதியில் வெளி யாகியுள்ளன.

இத்தேர்வுக்குத் தோற்றிய மாணவர்களின் பாடசாலை அதிபர்களுக்கு பெறுபேற்று விபரங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாகப் பிரஸ்தாப சங்கச் செயலாளரும் யாழ். பிரதம கல்வியதிகாரியுமான திரு. வி. சபாநாயகம் தெரி வித்தார்.

தெரிவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை தந்தை செல் வா தொடக்க நிலைப்பள்ளி மாணவர் எண்மர் ஆண்டு ஆறுக்கான புலமைப் பரீட்சை யில் தெரிவாகியுள்ளனர். இவர்களில் இருவர் உபகார நிதியுடன் விரும்பும் பாடசா லைக்கும் ஏனையோர் விரும்பும் பாடசாலைக்கும் விண்ணப்பிக் கும் வாய்ப்பைப் பெற்றுள் ளனர்.

முற்றுகை

(நீர்வேலி)

அச்செழுப் பகுதியில் சுமார் ஐந்து வீடுகளில் இயங்கிய கசிப்புக் குகைகளை இளைஞர் குழு ஒன்று முற்றுகையிட்டு சேதப்படுத்தியதுடன் அங்கு காணப்பட்ட சுமார் பதினை ந்து பரல்களில் இருந்த கசிப்பை நிலத்தில் ஊற்றியது.

கசிப்பு காய்ச்சுவதில் ஈடு பட்டு வந்த பலரையும் இனி மேல் இதில் ஈடுபடக்கூடாது என எச்சரித்துச் சென்றது.

பிறந்தநாள் வாழ்த்து

✖ தொண்டமானாறு, யோக ராஜா சுபத்திராதேவி தம்பதி யின் மகன் சிராஜா முதலா வது பிறந்த நாளைக் கொண் டாடுகிறார்.

✖ யாழ். காமால் லேன், ரவூப்(f) முர்ஷித்தா தம்பதி யின் மகள் பாத்திமாறிலா முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✖ பாஷையூர், அல்வின் அன்ரனியம்மா தம்பதியின் மகன் கரோல்ட் இன்று மூன் றாவது பிறந்த நாளைக் கொண் டாடுகிறார்,

✖ ஏழாலை மேற்கு, யோகேஸ் வரன் தேவரஞ்சனி தம்பதி யின் மகள் சுஜோ மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகி றார்.

✖ மட்டுவில் மேற்கு, கந் தையா ராதாதேவி தம்பதி யின் மகன் ஏகன் நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகி றார்.

✖ கொடிகாமம், மருதலிங் கம் அற்புதமலர் தம்பதியின் மகன் பிரதீபன் இன்று ஐந்தா வது பிறந்தநாளைக் கொண் டாடுகிறார்.

✖ சாவகச்சேரி, கனகசபை இந்திராதேவி தம்பதியின் மகன் தியாகேந்திரா ஐந்தா வது பிறந்தநாளைக் கொண் டாடுகிறார்.

✖ அரியாலை தெற்கு, தில்லை நாயகம் நிர்மலா தம்பதியின் மகன் ஜெரி மில்ரன் இன்று ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✖ குருநகர், ஜெரோம் கிளா றம்மா தம்பதியின் மகள் ஆன் மேரி சுவைடா இன்று தனது பிறந்தநாளைக் கொண் டாடுகிறார்.

அச்சுவேலி கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை

(அச்சுவேலி)

வலிகிழக்கு வட பகுதி (அச்சுவேலி) பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உறுப்பினர்களாக திரு வாளர்கள் தி. கமலநாதன், வ. திருஞானசம்பந்தர். மு. தர்மலிங்கம், ரி. செல்வரத்தி னம், பொ. இராசதுரை, கே. முத்துக்குமாரசாமி, வி. சிவ பாலன் ஆகிய ஏழு பேரும் பொதுச் சபை உறுப்பினர் களின் வாக்களிப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்ந்து மூன்று வருடங்கள் இயக்குநர்களாக பதவி வகிப்பார்கள் கூட் டுறவு உதவி ஆணையாளர்கள் திரு. வேலாயுதபிள்ளை, திரு. எஸ். சண்முகலிங்கம் ஆகி யோர் முன்னிலையில் தேர்தல் கள் நடைபெற்றது.

சுகாதார நிலைய திறப்பு விழா

(சரசாலை)

சரசாலை தெற்கு ஆரம்ப சுகாதார நிலையத் திறப்பு விழா பண்டிதர் க. சிவகுரு நாதன் தலைமையில் இடம் பெற்றது. மேற்படி நிலையத் தைச் சுகாதார போதனா விரி வுரையாளர் திரு. ச வைத் தீஸ்வரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். சுகா தார வாழ்வின் அவசியம் பற்றி போதனா விரிவுரையா ளர் விளக்கி உரை வழங்கினர். சரசாலை சௌக்கிய சேவை உத்தியோகத்தர் கா சிவப் பிரகாசம் சிறப்புரை வழங்கி னர். ஆ. சம்புலிங்கம் வர வேற்புரை நிகழ்த்தினர். சர சாலை மருத்துவ மாது செல்வி சி. யோகவதி, செல்வி இ. சத்தியலோஜினி ஆகியோர் உரை வழங்கினர். சுகாதார சபையின் செயலாளர் திரு. வி. ஸ்ரீசக்திவேல் நன்றியுரை வழங்கினர்.

பரீட்சையில் சித்தி

(புலோலி)

யாழ். பல்லூலக்கழக மருத் துவ பீடத்தினால் வெளியிடப் பட்ட உதவி வைத்திய பயிற்சி யாளர்களுக்கான இரண்டா வது ஆண்டுப் பரீட்சையில் செல்வி தயாளினி சிவகணேச ரும் சித்தியடைந்துள்ளார்.

ஈழமுரசில் ஏற்கனவே வெளி வந்த பரீட்சைப் பெறுபேற்றுச் செய்தியில் இவரது பெயர் தவறுதலாக இடம்பெறாமல் போய்விட்டது.

சிறந்த செயற்பாடு

(நீர்வேலி)

அச்செழுப் பகுதியில் அண் மையில் ஆரம்பிக்கப்பட்ட முதலுதவிப் பயிற்சி நிலையம் மிகவும் சிறந்தமுறையில் இய ங்கி வருகிறது. மேலும் இதே நிலையத்தில் தாய் சேய் நலன் பராமரிப்பு நிலையமும் மாதா மாதம் ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் நடாத்தப் பட்டு வருகிறது என நிலையப் பொறுப்பாளர், செல்வி அ. அருளையா தெரிவிக்கின்றார்.

இதனால் இப்பகுதிக்குழந்தை களின் நலனில் பெருமளவு முன் னேற்றம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வரி விளம்பரம்

தவறிவிட்டது

பிரான்சிஸ் சேவியர் சின் னையா, 18, கண்டி வீதி, யாழ் ப்பாணம், (573340582X) அடையாள அட்டை தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழமுரசு காரி யாலயத்தில் ஒப்படைக்கவும்.

திருமண சேவை

மணமகன்/மணமகள் தேவை யானோர் டாக்டர், எஞ்ஜினி யர், எக்கவுண்டர், வெளி நாட்டு மாப்பிள்ளை, கிளார்க் எவராயிருந்தாலும் உடனடி யாகத் தரப்படும். மூ. நாக லிங்கம், சோதிடத்தில்பார்த் துத் தரப்படும். கடித மூலம் தொடர்பு கொள்ளலாம்.

சிவகுரு மனோகரன், கலியாண சுந்தோர், சிவன் கோயிலடி சாவகச்சேரி.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

வெற்றிடம்

முகாமையாளர் (வேலைகள்)

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல அச்சகமொன்றுக்கு முகாமையாளர் (வேலைகள்) தேவை. அச்சக நிர்வாகம் அல்லது கணக்கியல் தராதரத்துடன் கூடிய நிர்வாக சேவையில் அனுபவம் உள்ளவர்கள் ஓய்வுபெற்றோர் உட்பட விண்ணப்பிக்கலாம். முன்னனுபவம், கல்வித் தகைமை, எதிர்பார்க்கும் சம்பளம் ஆகியவற்றை குறிப் பிட்டு கடித மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இலக்கம்: B / 915,

C/o. ஈழமுரசு, 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அடுத்தாண்டு ஆங்கில தின போட்டி ஏற்பாடு ஆரம்பம்

(புங்குடுதீவு)

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆங்கில தினப்போட்டிகளை அடுத்த ஆண்டில் சிறந்த முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்து யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் நடைபெற்ற விசேட மாநாடொன்றில் முடிவுசெய்யப்பட்டது.

யாழ். பிரதேச ஆங்கில வட்டாரக் கல்வியதிகாரி திரு. இ. க. குலசேகரம் தலைமையில் யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் இம்மாநாடு நடைபெற்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரபல பாடசாலைகளின் அதிபர்கள், வட்டாரக் கல்வி அதிகாரிகள், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஆங்கில தினப் போட்டிகளில் இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்தும், போட்டிகளை நடத்தும் இலக்குத் திகதிகள் பற்றியும் இம்மாநாட்டில் ஆராயப்பட்டது.

எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் பாடசாலை மட்டத்திலும், மேமாத இறுதிக்குள் வட்டார நிலையிலும் ஆங்கில தினப் போட்டிகளை நடத்துவதென்றும், மாவட்ட போட்டிகளை எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்தி முடிப்பதென்றும் இம்மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

நல்லை

ஆதீனத்தில் திருவெம்பாவை

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இம்மாதம் 18 ம் திகதி புதன்கிழமை முதல் 26 ம் திகதி வியாழக்கிழமை வரையுமுள்ள திருவெம்பாவைத் திரு நாட்களில் விசேட பூசை, ஆராதனை, புராணபடனங்களும், 27 ம் திகதி வெள்ளிக்கிழமை ஆர்த்திரா தரிசனமும் நிகழும்.

இதனை முன்னிட்டு 22 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி முதல் மாலை நான்கு மணி வரை ஆதீன கலா மண்டபத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழும்.

சட்டவிரோத மின்பவனை: புங்குடுதீவிலும் எச்சரிக்கை

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் சட்டவிரோத மான முறையில் மின் தொடர்புகளை ஏற்படுத்துவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவிலுள்ள இணக்க சபைகளின் சம்மேளனம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. ஒலிபெருக்கி மூலம் இங்குள்ள சகலபகுதி மக்களுக்கும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இதுபற்றி அறிவிக்கப்பட்டது.

புங்குடுதீவில் சட்டவிரோத மான முறையில் ஏற்படுத்தப் பட்டிருந்த மின்தொடர்புகள் யாவும் தற்போது துண்டிக்கப் பட்டுள்ளன. யாராவது சட்டவிரோதமான முறையில் களவாக மின் தொடர்பினை ஏற்படுத்தமுற்படின் அவர்களுக்கு எதிராக இங்குள்ள இணக்க சபைகளில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமெனவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது

புங்குடுதீவில் சட்டவிரோத மின் தொடர்புகள் அளவுக்கு அதிகமாக முன்னர் ஏற்படுத்தப்பட்டிருந்ததால் இங்கு மின் விநியோகம் முற்றுகத் தடைப்படும் ஆபத்து ஏற்பட விருந்தது. சட்டவிரோத மின் தொடர்புகள் தற்போது துண்டிக்கப்பட்டமையால் நிலைமை சீரடைந்துள்ளது.

கலை விழா

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ பார்வதி பாலர் கழகம்நடத்தியகலைவிழாகடந்த 4ம்திகதிஅரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலய மண்டபத்தில் நடை பெற்றது. திரு. பொ. சபாரத்தினம் தலைமையில் நடை பெற்ற இவ் விழாவிற்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு மு. இராமலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பாலர் கழகக் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன இந் நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தன. ஸ்ரீ பார்வதி வித்தியாலய அதிபர் திரு. கே. பாலசிங்கமும் உரையாற்றினர்.

ஒளி விழாவில் பங்குத் தந்தை உரை:

யாழ். மக்களுக்கு இன்னல்நேரின் அவர்கள் இறைவனிடம்தான் அகதிகளாகச் செல்வர்!

(காரைநகர்)

'அயலவருக்கு உதவி செய்வதன் மூலம் அவர்களின் உள்ளத்தில் கிறிஸ்து பிறக்க வழி செய்ய வேண்டும். உடைமைகளை இழந்து உறவினர்களைப் பிரிந்து யாழ்ப்பாணத்திற்கு அகதிகளாக வந்துள்ள மக்களுக்கு நாம் உதவிஎனும் எமது உள்ளங்களில் கிறிஸ்து பிறப்பார்.''

இவ்வாறு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் வருடாந்த நத்தார் ஒளி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய மானிப்பாய் உதவிப் பங்குத் தந்தை வண. ஏ. ஜேசுதாஸ் குறிப்பிட்டார்.

அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் கடந்த புதன்கிழமை பாடசாலை அழகரத்தினம் மண்டபத்தில் நடைபெற்ற இவ் ஒளி விழாவில் வண. ஏ. யேசுதாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

"நாம் இன்று பிரச்சினையான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் கிறிஸ்து பிறந்த சமூகமும் சுதந்திர மற்ற, அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்ட சமூகமாகவே இருந்தது.

கிறிஸ்து நமது உள்ளங்களிலே பிறக்க யார் யாருக்கு உதவ வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் நாம் உதவி செய்தல் வேண்டும்."

இன்று திருமலை, மட்டக்களப்பு, வவுனியா போன்ற இடங்களில் வாழுகின்ற மக்கள் தமக்கு இன்னல் ஏற்படும் போது யாழ்ப்பாணத்திற்கு அகதிகளாக வருகிறார்கள் நாளை யாழ். மக்களுக்கு இன்னல் நேர்ந்தால் அவர்கள் இறைவனிடம தான் அகதிகளாகச் செல்ல வேண்டும்.

பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தனது தலைமையுரையில் கூறியதாவது:

"உலகில் அறியாமை, அட்டூழியம், கொடுமை என்பன தோன்றும் போது மகான்கள் தோன்றுவது இயற்கை. இவ்வாறே இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயேசு தோன்றி துன்பப்படுகின்ற மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்தார்.

இந்து மதமாயினும் எந்த மதமாயினும் இயேசு பிரானுடைய வரலாற்றை அனைவரும் அறிந்திருக்க வேண்டும்" என அவர் கூறினர்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. உப அதிபர் திருமதி. பி. மகாதேவா நன்றி தெரிவித்தார்.

மாணவர் அறிவு: ஏட்டுக்கல்வி மட்டுமே பூரணமாக்காது

(சுழிபுரம்)

"மாணவர்களின் அறிவு வெறுமனே ஏட்டுக் கல்வியால் மட்டும் பூரணத்துவம் அடைய மாட்டாது. கைவினைப் பயிற்சிகளிலும், தொழில் நுட்ப நெறிப் பயிற்சிகளிலும் அவர்களின் அறிவை விருத்தி யடைய வைக்கின்றன. அவர்களின் வளர்ச்சிக்கு உதவ வேண்டியது சமுதாயத்தின் முக்கிய பங்குகளில் ஒன்று"

இவ்வாறு சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாசாலையில் நடைபெற்ற பொருட்காட்சி னைவைவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு கா. சந்திரராஜா கூறினர்

அதிபர் திரு. க. வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்ற மேற்படி பொருட்காட்சியை இளைப்பாறிய அதிபர் திரு ச சிதம்பரப்பிள்ளை திறந்து வைத்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர் திரு. சு. சுந்தரப்பிள்ளை பேசுகையில்: "எவ்வளவோ கஷ்டங்களுக்கு மத்தியில், மேலிடங்களிடம் கையேந்திப் பயனில்லை என்ற நிலையில் நாமே நம் தேவைகளை நிறைவேற்றத் தீர்மானித்தோம். மக்களின் ஒத்துழைப்பால் பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறையையும் தளபாடக் குறையையும் நீக்கியிருக்கிறோம். இது பாடசாலையிலும், மாணவரிலும் பெற்றோர் வைத்திருக்கும் அன்பிற்கு முன்மாதிரி" என்றார்.

நோய் அணுகாதிருப்பதற்கு சுகாதாரம் பேணல் நலம்

(வேலணை)

"நாம் ஒவ்வொருவரும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும், வாழப்பழகினால் நமது கிராமத்திலுள்ளவர்களும் எம்மை பின் பற்றிநடந்துகொள்ளுவார்கள். இதன்மூலம் நாம்நோயற்றவர்களாகவும் ஆரோக்கியமானவர்களாகவும் வாழ்வது திண்ணம்."

மேற்கண்டவாறு வேலணை செட்டிபுலம் சனசமூக நிலைய மண்டபத்தில் ஆரம்ப சுகாதார நிலையமொன்றை திறந்து வைத்தபின் உரையாற்றிய வேலணையைச் சேர்ந்த சமூக சேவகியும் ஆசிரியையுமாகிய திருமதி தி. பத்மாவதி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "இப்பகுதிப் பெண்கள் சாங்கள் சுத்தமாகவும் வாழ்வதுடன் தமது குழந்தைகளை சுத்தமாகவும் வைத்திருப்பதுடன் அவர்களுக்கும் சுகாதாரத்தை போதித்து வரல் வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு சுகாதாரப் பழக்க வழக்கங்களை நாம் கைக்கொண்டு வருகின்றோமோ அவ்வளவுக்கு எம்மை நோய் பீடிப்பதினின்றும் காப்பாற்றிக் கொள்ள முடியும்" என்றார்.

வேலணை கிழக்குப் பகுதி சுகாதாரப் பரிசோதகர் திரு. சிவசுப்பிரமணியம் பேசுகையில், "கிராம மக்களின் ஆரம்ப சுகாதாரப் பழக்கங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்துவைக்கப்பட்டு வருகின்றது மக்களின் சுகாதார பழக்க வழக்கங்களை அறிந்தே அம்மக்களை மற்றோர் எடை போடுகின்றார்கள். வேலணை கிழக்கு கிராமத்திலுள்ளவர்கள் இச்சுகாதார நிலையங்களின் மூலம் அதிக பலனைப் பெறக்கூடியதாக இருக்கும். இந் நிலையத்திற்கு நீங்கள் வந்து உங்களது சுகாதார அறிவை பெருக்கிக் கொள்ளுதல் வேண்டும்" என்றார்.

வேலணை கிழக்கு கிராமோதயசபைத் தலைவரும் ஆசிரியருமான திரு எஸ். மாணிக்கவாசகர் உரையாற்றுகையில், "சுத்தம்சுகம் தரும்என்ற ஆன்றோர் வாக்கைநாமெல்லோரும்கடைப்பிடித்து வந்தால் நோயினின்றும் நாம் விடுவித்து பூரண ஆயுளுடன் வாழ முடியும்" என்றார்.

வேலணை கிராமிய மருத்துவமனை பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி. விமலா தங்கவேலு உரையாற்றுகையில்:-, "மனிதனின் ஆயுள் அடிப்படைச் சுகாதாரத்திலே தான் தங்கியுள்ளது. அதை நீங்கள் யாவரும் கைக்கொண்டால் மருத்துவ மனைக்கே செல்லத்தேவையில்லை. பண்டைய எம்முன்னோர் சுகாதாரபழக்க வழக்கங்களை மேற்கொண்டிருந்தனர். கண்டபடி உணவு அருந்தாமல் நேரத்திற்கு நேரம் உணவு உட்கொண்டார்கள் இதனால் அவர்களை நோய் எளிதில் பீடிக்கவில்லை" என்றார். வேலணை கிழக்கு குடும்பநல சேவையாளர் புஷ்பலக்ஷ்மி சோமசுந்தரம் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

இன்று

கருத்தரங்கு

(காரைநகர்)

ஐ. நா சர்வதேச மனித உரிமைகள் தினத்தையிட்டு இன்று 10 ம் திகதி காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் டாக்டர் ஆ. தர்மலிங்கம் தலைமையில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

ரயில் சேவை பாதிக்கக் கூடிய வகையில் எவரும் நடந்து கொள்ளக் கூடாது!

பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் வேண்டுகோள்

"யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை முற்றுக நிறுத்திவிட அரசு யோசிப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. தமிழ்ப்போராளிகள் தொடர்ச்சியாகஏற்படுத்தி வரும்நட்டமே தற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. ரயில் சேவை நிறுத்தப்படும் போது கொழும்புக்கும் ஏனைய இடங்களுக்கும் பயணம் செய்வது பெரிதும் பாதிக்கப்படுகின்றது. தனியார் பஸ் சேவை இரட்டிப்பு பணம் பெற்று கொழும்புச் சேவையை நடத்துகின்றது. தனியார் பஸ் சேவைக்கு கொள்ளை இலாபம் தேடித்தரவே இந்த உத்தேசம் என்ற வதந்தியும் பரவத்தான் செய்கிறது' என்று பருத்தித்துறை பிரஜைகள் குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

எது எப்படி இருப்பினும். ரயில் சேவை பாதிப்புற்றால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் போக்கு வரத்து, உட்பட பெரும் பாதிப்பு ஏற்படும் எல்லாவற்றுக்கும் மேலாக பெரும் பாதிப்பைத் தரக் கூடிய வகையில் வட பகுதி இரட்டிப்புச் செய்யப்படும்

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த பரிதாபக் கதையாக இது அமைந்து விடும். எனவே, எவரும் ரயில் சேவையைப் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென தமிழ் மக்களின் நலனின் பெயரால் அனைவரையும் பணிவுடன் வேண்டுகிறோம். உயிர் நாடியான இந்தச் சேவைக்கு பாதிப்பு ஏற்படுத்துவோர் சந்தேகமில்லாது சுயநலத் துரோகிகள் என்று வரலாற்றில் இடம்பெறுவர் என்றும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலர் பாடசாலை

ஒளி விழா

(நல்லூர்)

நல்லூர் பரி. யாக்கோபு ஆலய பாலர் பாடசாலையின் வருடாந்த ஒளி விழா கடந்த புதன்கிழமை மாலை பரி. யாக்கோபு ஆலய ஜெபமண்டபத்தில் நடைபெற்றது.

பாலர் பாடசாலைப் பிள்ளைகளின் பாடல்கள், ஆடல்கள், நாடகங்கள் நடைபெற்றன ஏராளமான பெற்றோர்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்ட இவ்விழாவில் "நத்தார் பப்பா" பிள்ளைகளுக்கான பரிசில்களை வழங்கினர். இதற்கான ஏற்பாடுகளை பாலர் பாடசாலை நிர்வாகிகளான திருமதி யே. விஷயநாதன், திரு. ஜ ஆர். அரியரத்தினம் ஆகியோர் செய்திருந்தார்கள்

படித்த பெண்களுக்கான

தொழில் முன்னிலைப்பயிற்சி: சான்றிதழ் வழங்கப்பட்டது

(சாவகச்சேரி)

கடந்த ஆண்டு சாவகச்சேரியில் இலங்கை மாதர் பணியகத்தால் தெரிவு செய்யப்பட்டு படித்த இளம் பெண்களுக்காக நடத்தப்பட்ட தொழில் முன்னிலைப் பயிற்சி நெறி வகுப்புக்களில் சித்தி எய்திய பெண்களுக்கு இம்மாத முற்பகுதியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

கடந்த ஆண்டில் சுமார் 75 படித்த இளம் பெண்களை இப் பயிற்சி நெறி வகுப்புகளுக்காக இலங்கை மாதர் பணியகம் தெரிவு செய்திருந்தது. இவர்களுக்குப் பல தொழில் நிபுணர்களைக் கொண்டு சுமார் ஒரு மாதப் பயிற்சியளிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

உதய சிந்தனை

கண்ணியமானவன் சட்டத்தைத் துணையாகக் கொள்ள மாட்டான்; நீதியையும், நியாயத்தையுமே தன் துணையாக அவன் கொள்வான்.

-ஆங்கிலப் பழமொழி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 2 36

இதயஒலி

10-12-85 செவ்வாய்க்கிழமை (குரோதன கார்த்திகை-25

எந்தச் சட்டத்தில் இந்த நீதியுண்டு?

குற்றம் செய்தவன் எவனுகத்தான் இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்பது உலக நியதி. அதுவே நீதியும் கூட.

நீதியின் முன்னுல் பெரியவன், சிறியவன், ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது.

இதற்காகவே சட்டங்கள் உருவாக்கப்பட்டன,

சில வேளை சட்டம் பிழைக்கலாம்; பிழைத்துமிருக்கிறது. ஆனுல் நீதி பிழைக்கக் கூடாது. பிழைத்தால் பிரளயம்தான் ஏற்படும்; ஏற்பட்டதுமுண்டு.

கொள்ளையடித்தவன் தண்டிக்கப்படுவது நியதியும் நீதியுமாகும்.

ஆனுல் கொள்ளை கொடுத்தவன் தண்டிக்கப்படுவது எந்த வகையில் நீதியானது?

"எய்தவன் இருக்க அம்பை நோகலாமா" என்றெருரு பழமொழியும் இருக்கிறது.

கொள்ளையடித்தவன் கண்டு பிடிக்கப்படாததால், கொள்ளை கொடுத்தவன் தண்டிக்கப்பட்டுள்ள சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளதனுலேயே இதனை நாம் எழுத நேர்ந்துள்ளது.

உலகின் எட்டாவது அதிசயமாக எழுதப்பட வேண்டிய இச்சம்பவத்தை, அனைவரும் அறிந்திருக்க வேண்டுமென்பதால் இதனை நாம் விரிவாகவே பதிய வைக்க விரும்புகின்றேம்.

சிவில் நிர்வாகம், பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு எதுவுமே அழுல் செய்யப்படாத யாழ்ப்பாணத்தில், அரசாங்கத்தின் பணத்துக்கு எவரால் பாதுகாப்பு வழங்க முடியும்?

கடந்த வருட இறுதிப் பகுதியில் நிலைமை இன்றிலும் பார்க்க மிக மோசமாக இருந்தது என்பதை அனைவரும் அறிவர்.

குருநகர் இராணுவ முகாமுக்கு முன்னுல் வங்கிகள் அமைந்திருந்ததால், சாதாரண குடிமக்கள் பணக் கொடுக்கல் வாங்கலுக்கு அங்கு செல்ல முடியாத, உயிருக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலை இருந்தது.

இந்த நிலையில், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி ஊழியர்களின் ஒரு பகுதிச் சம்பளமான சுமார் பதினெட்டாயிரம் ரூபாவை வங்கியிலிருந்து எடுத்து வரச்சென்ற ஆஸ்பத்திரி மேலதிகச் செயலாளர் திரு. நடராஜாவுக்கு ஒரு அனுபவமேற்பட்டது.

வங்கியிலிருந்து பணத்துடன் ஆஸ்பத்திரி நோக்கி வரும் போது, குறிப்பிட்ட பதினெட்டாயிரம் ரூபா வழியில் இனம் தெரியாதவர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது.

இது பற்றி உத்தியோக பூர்வமாக உடனடியாகவே அறிவிக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டது.

பாதுகாப்பு, சட்டம் ஆகியவற்றிற்குப் பொறுப்பானவர்களால் கொள்ளையரைப் பிடிக்க முடியவில்லை. கொள்ளைப்பணத்தை மீட்க முடியவில்லை.

அதற்காக, அந்த ஏழை அரசாங்க ஊழியன் இப்போது பழிவாங்கப்பட்டுள்ளான்.

கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது ஒரு வருடத்துக்கு முன்னராகும்.

இதன் பின்னர் கொள்ளை கொடுத்த ஆஸ்பத்திரி மேலதிகச் செயலாளர் தமது சேவையிலிருந்து இளைப்பாறினர்.

இளைப்பாற்றுப்பணிக் கொடைப்பணம் அவருக்கு வழங்கப்பட்டது. கொள்ளையடிக்கப்பட்ட பதினெட்டாயிரம் ரூபாவும் மொத்தமாக அதில் கழிக்கப்பட்டுள்ளது.

கடமையுணர்வுள்ள ஒரு அரசாங்க ஊழியன், தனது உயிருக்கே உத்தரவாதமளிக்கப்படாத சூழ்நிலையில், சக ஊழியர்களின் சம்பளப்பணத்தை எடுத்து வரும் போது கொள்ளையர்கள் கைவரிசைக்கு இலக்காகி பணத்தைப் பறிகொடுத்ததற்கு, அவனது இளைப்பாற்றுக் காலத்தில் அரசாங்கம் வழங்கிய சன்மானம் இது.

கேவலம், ஒரு ஏழைத்தமிழனுகப் பிறந்ததால், திரு. நடராஜாவுக்கு இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இன்னும் எத்தனையோ பொன்னையா, கந்தையா, சின்னையாக்களுக்கும் இது நடைபெறும் என்பதற்கு நடராஜா ஒரு முன் உதாரணம்.

எந்தக் சட்டம் இந்த நீதியை வழங்கியதென்பதைத் தாம தமின்றிக் கண்டு பிடிப்பதே இப்போது முக்கியம்.

★ இன்று ஐ. நா. மனித உரிமைதினம்

இத்தினத்தைக் கொண்டாட தமிழருக்கு உரிமையுண்டா?

ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் சுய நிர்ணய உரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தும் உறுப்புரையை உள்ளடக்கிய தான மனித உரிமைகள் சாசனத்தை அங்கீகரித்து, ஏற்றுக் கொண்டு, தனது நாட்டில் நடை முறைப் படுத்துவதாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் எடுத்துக் கொண்ட உறுதியுரையின் பேரில் ஓர் உறுப்பு நாடாக ஐ. நா சபையில் தன்னையும் இணைத்துக் கொண்டுள்ள நாடு ஸ்ரீலங்கா.

அப்படிப்பட்ட ஸ்ரீலங்கா 1977ஆடிப் பொதுத் தேர்தலை, முன்னர் இருந்ததும் பின்னர் இழக்கப்பட்டதுமான தமிழ் இராச்சியத்தை மீள்வித்து, புனரமைப்பதற்கான ஆணையைத் தமிழ் மக்களிடம் கோரும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக எதிர்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அபரிமிதமான வாக்குகளால் தமிழ் மக்கள் அளித்த அந்த ஆணையை மதித்து அங்கீகரிக்கத் தவறிவிட்டது.

அதே 1977 பொதுத் தேர்தலை மறுபக்கத்தில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாக எதிர் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி, முன்னர் பதவியிலிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைத் தலைமையாகக் கொண்ட முக்கூட்டுக்கட்சிகளால்தயாரித்து, நடை முறைப்படுத்தப் பட்டு வந்த 1972 ம் வருட அரசியல் திட்டத்தை மாற்றி, புதிய தொரு அரசமைப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு வாக்காளர்பெருமக்களிடம்ஆணையைக் கோரியது. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அந்த ஆணையை வழங்கின. தான் கோரிய ஆணைக்குச் சாதகமாக வாக்களியாது, பாதகமாகவாக்களித்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து ஏனைய ஏழு மாகாணங்களுக்கும் ஓர் அரசமைப்பை ஐக்கிய தேசியக் கட்சி தயாரித்திருக்கலாம்.

ஆயின், ஜனநாயக விரோதமாக தமிழ் மக்களின் ஆணையைப் பெரிதும், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளாததுமான சிங்கள தேசிய நிர்ணய சபையாக அமர்த்தப்பட்ட பாராளுமன்றத்தால் தயாரிக்கப்பட்ட ஒரு அரசியலமைப்புத் திட்டத்தை வலுக்கட்டாயமாக தமிழ்ப் பகுதிகளில் திணித்து வருவது ஜனநாயகமும் அல்ல; தார்மீகமும்அல்ல.

ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தபிற்பாடு ஸ்ரீலங்கா நாடு தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தும், 1. பொருளாதார சமூக, பண்பாட்டு உரிமைகள் மீதானதும், 2. குடியியல், அரசியல் உரிமைகள் மீதானதுமான; சர்வதேச ஒருப்பாடுகள் இரண்டிலும் கைச்சாத்திட்டுள்ளது அதன் மூலம் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டிய கட்டுப்பாட்டுக்கு உள்ளாகியுள்ளது.

அப்படியிருந்தும் திம்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணியும், தீவிரவாத இளைஞர் இயக்கங்களும் ஏகோபித்து கூட்டாகச் சமர்ப்பித்திருந்த ஆகக் குறைந்த கோரிக்கைகளான 1 வடக்குக் கிழக்கு மாகாணங்களை இலங்கைத் தமிழ் மக்களின் தனித்துவம் வாய்ந்த மரபு வழித் தாயகமாக அங்கீகரிக்கவும், அதற்கு உத்தரவாதம் அளிப்பதற்கும், 2. இலங்கைத் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதற்கும், 3. தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கும், ஸ்ரீலங்கா அரசு மறுத்து விட்டமையால் திம்பு சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமை தெரிந்ததே.

த. இன்பராசு உரும்பிராய்

மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளை மனித உரிமைகள் சாசனமாகக் கோவைப்படுத்தி அகல் விரிவாகப் பிரகடனம் செய்த ஐக்கிய நாடுகள்பொதுச் சபையானது, ஐ. நா. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் மேற்படி மனித உரிமைகள் சாசனம் அகல் விரிவாகப் பிரகடனம் செய்த ஐக்கிய நாடுகள் பொதுச்சபையானது ஐ. நா. உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் மேற்படி மனிதவுரிமைகள் சாசனம் அகல் விரிவாகப் பிரகடனம் செய்யப்பட்டடிசெம்பர்10ஆம் நாளை "மனித உரிமைகள் தினமாக" வருடா வருடம் அனுட்டித்து வர வேண்டும் என்று விடுத்த கோரிக்கையின் மீது உலக நாடுகளும் அவ்வாறே அத்தினத்தை ஒரு வருடாந்த நிகழ்வாக அனுட்டித்தும் வருகின்றன.

ஐ. நா மனிதவுரிமைகள் சாசனத்தின் உறுப்புரைகளின் பிரசாரமாகவும், மேற்சொன்ன பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் மற்றும் குடியியல், அரசியல் உரிமைகள் மீதானதுமானசர்வதேச ஒருப்பாடுகளின் பிரசாரமாகவும் உறுதி செய்யப்படுள்ள தமது சுய நிர்ணய உரிமை அதே ஐ. நா சபையின் உறுப்பு நாடாகவும், சம்பந்தப்பட்ட சர்வதேச ஒருப்பாடுகளில்கைச்சாத்திட்டுள்ள நாடாகவும் விளங்கும் ஸ்ரீ லங்காவினுல் மதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாது மீறப்படும் நிலையில் தமிழ்த் தேசிய இனம் மனித உரிமைகள் தினத்தையொட்டி எவ்விதமாக நடந்து கொள்ளப் போகிறது.

கூட்டத்தோடு கூட்டமாக உலக நாடுகளுடன் சடங்காசாரமாக அத்தினத்தை அனுட்டிக்கப் போகிறதா? அல்லது மாறுக நிகழும் மனித உரிமை மீறுதல்களுக்கு உலகின் கவனத்தையும், கரிசனையையும் ஈர்க்கும் மாற்று நடவடிக்கைகளில் இறக்கப் போகிறதா?.

திம்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் மக்களின் குலமானம் ஒன்றையே பெரிதெனக் கொண்டு ஏகோபித்துக் கூட்டாக தமது ஆகக் குறைந்த அடிப்படைக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்த தமிழ் பிரதிநிதித்துவ இயக்கங்கள்தாம் தமிழ் மக்களுக்கு ஐ. நா. மனித உரிமைகள் தினத்தைத் தமிழ் உரிமைகளை, இனவிடுதலையை வென்றெடுக்க சாதகமாக உபயோகிப்பதற்கான வழியையும் கட்டுதல் வேண்டும்.

சர்வதேச தொலைத் தொடர்பு சாதனங்களால் நன்கு பிரஸ்தபிக்கப்படவும், அதனூடாக உலகின் கவனமும், கரிசனையும் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் பால் ஈர்க்கப் படவும் அத்தகைய ஒரு கூட்டு அறிவிப்பு காலத்தின் அவசிய தேவையாகும்.

தனது உறுப்பு நாடான ஸ்ரீ லங்காவை நெறிப்படுத்த வேண்டிய கடப்பாடு ஐ. நா. சபைக்கு உண்டு. அதற்கும் அதன் பொறுப்பை உணர்த்துவதற்குப் பொருத்தமான சர்வதேச தினம் ஐ. நா. மனித உரிமைகள் தினமே.

நல்லூர் நல்லலக்ஷ்மி

மக்களை ஆத்மீக வழியில் ஈடுபட வைக்கும் பணியில் பல சைவ மங்கையர்கள் ஈடுபட்டு வெற்றி கண்டதை வரலாறு குறித்துள்ளது. காரைக்கா அம்மையார், திலகவதி, மங்கையற்கரசியார், பான்ற பெண்களின் ஆத்மீகப் பணி இந்து மக்களால் மறக்க முடியாதது. பல நூற்றாண்டுகளின் முன் வாழ்ந்து மறைந்த இப் பெண்களின் அடிச் சுவட்டில் வெற்றி நடை போட்டு எம் கண்முன் வாழ்ந்து அமரராகி விட்டவர் செல்வி. நல்லலக்ஷ்மி அவர்கள்.

"இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றுல் மனிதப் பிறவியும் வேண்டுவதே" என்றார் அப்பர் சுவாமிகள். ஆனுல் அப் பொற்பாதம் காணும்பாக்கியத்தையும், தன் இரு கண்களில் ஒளியில்லாததால் இழந்து விட்ட செல்வி நல்லலக்ஷ்மி அவர்கள் அதனுற் சோர்ந்து விடாது, அப்பரம் பொருளைத் தன் உணர்விலே உணர்ந்து கண்ணிருந்தும் பாராத எம் போன்ற பலரையும் அத் தூய ஒளிப்பிழம்பை உணர வைத்தமை வரலாறு குறிக்க வேண்டிய பெருமையே!

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவை எந்நேரமும் தியானித்து மற்றவர்களையும் தியானிக்கச் செய்த அம்மையார் அவர்கள் மறைந்து விட்டாலும். அவர் வாழ்ந்த இல்லம் இன்று சாயி ஆலயமாக மாறி பக்தர்களுக்கு அருள் சுரக்கின்றது. பஜனையும், நகர சங்கீர்த்தனமும், வேள்வியும், யாகமுமாக அருள் மணம் பரப்புகிறது

"தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்" என்றுன் வள்ளுவன். அம்மையார் விட்டுச் சென்ற சாயி இல்லம் என்னும் எச்சம் அவரைத் தக்கார் என நிரூபித்து விட்டது. அவர் நினைவு எம்மோடு வாழ்வதால் அவர் மறைந்து ஆண்டுகளாகி விட்டதை நம்ப முடியவில்லை.

○ இ. ஜெயராஜ்

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற 'சார்க்' அமைப்பு; வல்லரசுகளிடம்

அணுவாயுத உற்பத்தி, சோதனைகளை முற்றாக நிறுத்திவிட வேண்டுகோள்!

(டாக்கா)

அணுவாயுத உற்பத்திகளையும், சோதனைகளையும், ஈடுபடுத்தலையும் முழுமையாக நிறுத்திவைக்கும் உடன்பாடு ஒன்றினை எட்டுமாறு வல்லரசுகளைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றை டாக்காவில் நடைபெற்ற தெற்காசியப் பிராந்திய நாடுகள் மாநாடு ('சார்க்' அமைப்பு) கேட்டுக்கொண்டுள்ளது.

'சார்க்' அமைப்பின் ஒவ்வொரு நாடுகளும் சம அளவுக் கருத்துக்களை வெளியிடுவதென்றும் அவற்றிற்கு விரைவான தும், ஒருமனதானதுமான தீர்வுக்கு வகைசெய்யப்பட வேண்டும் என்றும் தீர்மானமாகியது.

இம்மாநாட்டின் இறுதியில் சாஸனம் ஒன்றும் வரையப்பட ஏற்பாடாகியிருந்தது.

பாகிஸ்தான் ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல்-ஹக் மாநாட்டில் பேசுகையில்,' தெற்காசியப் பிராந்திய நாடுகளின் சமூக, பொருளாதார நிலை மேம்பட இம்மாநாடுவழிவகுக்கிறது. ஒன்றுபட வேண்டும் என்ற மன உறுதியும் பரிமளித்தது'' என்று கருத்து வெளியிட்டார்.

இலங்கை ஜனதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனவும் மாலைதீவு ஜனதிபதி கையூமும், பூட்டான் மன்னர் வாங்சுக்கும், இதே கருத்தையே வெளிப்படுத்தினர்.

நெல்லியடியில் கருத்தரங்கு

நெல்லியடி சனசமூக நிலைய முன்றலில் நாளை புதன்கிழமை மாலை நடைபெறும் கருத்தரங்கில் இலங்கை தொழிற்சங்க சம்மேளன வடபிரதேசப் பிரதிநிதி எம்.ஏ சி. இக்பால், நாவலாசிரியர் கே, டானியல் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

தி. மு. க. தலைமையில் எதிரணி அரசுக்கு எதிராக பேரணி

(சென்னை)

தமிழ் நாட்டில் தற்போது ஏற்பட்டு வரும் சில பிரச்சினைகள் தொடர்பாக எதிர்க்கட்சிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் மாநில அரசுக்கெதிராகப் பேரணிகள் நடத்திக் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

தமிழ் நாட்டில் தோன்றியுள்ள ஆசிரியர், மீனவர் தலைமைச் செயலக ஊழியர் பிரச்சினைகள் மாநில அரசுக்குப்

பெரும் தலையிடியாக இருந்து வருகின்றன.

ஆசிரியர் கிளர்ச்சிக்கு ஆதரவு தெரிவித்தும், சென்னையில் மீனவர்மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததற்குக் கண்டனம் தெரிவித்தும் தி மு க தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் எதிர்க் கட்சிகள் மதுரையில் பேரணி நடத்தியுள்ளன.

திருச்சியிலும் பல கூட்டங்களும், பேரணிகளும் நடத்தப்பட்டன. தி. மு. க.வுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட்கம்யூனிஸ்ட்கட்சி ஜனதாக் கட்சி ஆகியனவும் பங்குபற்றின. மதுரையில் நடைபெற்ற பேரணியில் நூறு ஆசிரியர்களும் கலந்துகொண்டனர்.

கரூர், திண்டுக்கல், அருப்புக் கோட்டை முதலான இடங்களிலும் இதேபோன்றே பேரணிகள் நடத்தப்பட்டுள்ளன.

அரசு இப் பிரச்சினைகளைத் தகுந்த அணுகுமுறையுடன் உடனடியாக தீர்த்து வைக்க வேண்டுமென்று கலைஞர் மு. கருணாநிதி வற்புறுத்தியுள்ளார்.

இது இவ்வாறு இருக்க, பல வாரங்களாக நீடித்து வரும் ஆசிரியர் பிரச்சினை குறித்து சட்டமேலவை உறுப்பினர்கள் மூவர் நிதியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனிடம் மூன்று விடயங்கள் அடங்கிய சமாதானத் திட்டம் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

சம்பள உயர்வு உட்பட பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர்.

தமிழ் நாட்டில் நீடித்துவரும் ஆசிரியர் கிளர்ச்சியைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு சென்னை திருச்சபையின் நிர்

வாகக் கமிட்டி தமிழ்நாடு அரசையும், ஆசிரியர்களையும் கேட்டுக் கொண்டுள்ளது.

பேராயர் ஜே. தங்கமுத்து இக்கோரிக்கையை விடுத்துள்ளார்

தமிழ் நாட்டின் சிலமாவட்டங்களில் மொத்தம் எண்பத்து இரண்டு கல்விக் கூடங்களை திருச்சபை நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

150 பிரதிநிதிகளுடன் அமெ. குழு ரஷ்ய விஜயம்

வல்லரசுகளின் நட்புறவில் வலிவு காணும் சீரிய சூழ்நிலை

(மாஸ்கோ)

அமெரிக்காவைச் சேர்ந்த நாநூறு வர்த்தகப் பிரதிநிதிகள் தற்போது மாஸ்கோ விஜயம் செய்துள்ளனர். இவர்கள் சோவியத் வர்த்தகர்களுடன் பொருளாதார வர்த்தக நடவடிக்கைகள் குறித்துத் தீவிர அணுகுமுறையில் பேச்சுவார்த்தைகள் நடத்துவர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் சோவியத் தலைவர் திரு. கொர்பசெவ்வும், அமெரிக்க ஜனதிபதி திரு. ரெனல்ட் ரீகனும் ஜெனீவாவில் நடத்திய உச்சி மாநாட்டின்பின் நிகழும் முதலாவது பரஸ்பரத் தொடர்பு இதுவாகும்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் குழுவில் அமெரிக்க வர்த்தகத் துறை மந்திரியும் இடம் பெறுகிறார்.

இப்பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் வியாழக்கிழமை வரை நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பிரபல நிறுவனங்களை உள்ளடக்கிய குழுவில் நூற்று ஐம்பது பிரதிநிதிகள் உள்ளனர்.

சோவியத் சார்பில் இவர்களுடன் நூற்றுமுப்பது பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வர்.

இரு வல்லரசுகளினதும் பொதுவான நட்புறவு நிலை வலுப்பட்டிட இச்சந்திப்பு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிலை:

கூட்டணிப் 'பொலிட்பீரோ' சென்னையில் கூடி ஆராய்ந்தது

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'பொலிட்பீரோ' நேற்று முன்தினம் சென்னையில் கூடி இலங்கை இனப் பிரச்சினையின் தற்போதை நிலைபற்றி ஆராய்ந்தது.

கூட்டணியின் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம், லண்டன் சென்றுள்ளதால் வெளியுறவுச் செயலர் திரு, ரமேஷ் பண்டாரியிடம் சமர்ப்பித்த மாற்று யோசனைகள் குறித்து இவ்வேளை ஆராயப்படவில்லை என்று முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

அணுகுண்டு: ஹியாமறுப்பை நம்பமுடியவில்லையே - ராஜீவ்

(டாக்கா)

''தாம் அணுவாயுதம் தயாரிப்பதான கூற்றைப் பாகிஸ்தான் ஜனதிபதி ஷியாவுல்-ஹக் மறுக்கிறார். ஆனாலும் சந்தர்ப்ப சாட்சியங்கள் அவரது கூற்றுக்கு எதிரானவையாகவே அமைந்துள்ளன என்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி செய்தியாளரிடம் கேகை-யில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் சொன்னார்.

''பாரதத்திற்கு அணுவாயுதம் தயாரிக்க விருப்பமில்லை, அதற்கான முன் முயற்சியையும் அது மேற்கொள்ளாது'' என்றும் திரு. காந்தி சொன்னார்.

வெற்றிடம்

ஒப்புநோக்குனர்கள்
(Proof Readers)

ஈழமுரசு பத்திரிகையில் கடமையாற்ற ஒப்புநோக்குனர்கள் (தமிழ்/ஆங்கிலம்) தேவை. முன்னனுபவம் உடையவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். பத்திரிகை அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்,

பொது முகாமையாளர்,
ஈழமுரசு,
37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

பாஹ்ரெயினில் ஏயர்போர்ட் கிளீனர்கள், சிங்கப்பூர் யோகூர் (Jogour) வேலை பெற்றுச் செல்லும் உங்களது பிரயாண ஒழுங்குகளுக்கு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

'ANTONS' (J. M. Joseph)
15, டேவிட் ரோட், யாழ்ப்பாணம்.

மரண அறிவித்தல்

குமாரசாமி சங்கரப்பிள்ளை

சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்னாள் கனிஷ்ட அதிபரும், சாவகச்சேரி வடக்கு இணைக்கசபைத் தலைவருமாகிய குமாரசாமி சங்கரப்பிள்ளை 09-12-1985 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குமாரசாமி சின்னச்சிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் ஆசிரியை சின்னம்மாவின் அன்புக் கணவரும், இராதா (ஆசிரியை, டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி), இரஞ்சினி, இரவீந்திரன் (U.K.), இரஞ்சன் (U.K.), இரவிச்சந்திரன் (U.K.), இரதிதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணபவானின் (நில அளவையாளர்) மாமனாரும், கிருத்திகா, பார்த்திபன் ஆகியோரின் அன்புப் பேரனும், திரு. கு. தில்லைநாதன் (ஆசிரியர், அமிர்தாம்பிகை வித்தியாலயம், சாவகச்சேரி), திருமதி அன்னலட்சுமி திசநாயகம் (இந்துக் கல்லூரி, சாவகச்சேரி), காலஞ்சென்ற நில அளவையாளர் கந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. மு. திசநாயகத்தின் (கூட்டுறவு இலாகா)மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

தமிழ்முரசு

பத்திரிகையாளர் பேட்டியில் அறிவிப்பு:

இலங்கை இனப்பிரச்சினை மீது வாஷிங்டனில் இருநாள் மாநாடு

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக வாஷிங்டனில் நடைபெற்ற இரண்டுநாள் மாநாடொன்றில் இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணவேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமெரிக்க மேரிலான்ட் பல்கலைக்கழகம், முரண்பாட்டு முகாமை மீதான அனைத்து நாட்டு அபிவிருத்தி மத்திய நிலையம், கண்டி இன ஆய்வுக்கான மத்திய நிலையம் ஆகியன ஒருங்கிணைந்து இம்மாநாட்டை நடத்தின. இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலைகள் பற்றி இங்கு பலரும் எடுத்துக் கூறியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே. ஆரின் வேண்டுதல் ராஜீவால் நிராகரிப்பு

'சார்க்' தலைமைத்துவத்தை ஏற்க அவர் மறுப்பு

(டாக்கா)

''தெற்காசியப் பிராந்திய நாடுகளின் ('சார்க்' அமைப்பு) தலைமைத்துவப் பொறுப்பை நானே ஏற்கவேண்டும் என்று இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கோரியிருந்தார் ஆனால் அக்கோரிக்கையை என்னால ஏற்க முடியாது'' என்று பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அறிவித்துள்ளார்.

''சிறிய நாடுகளோ பெரிய நாடுகளோ 'சார்க்' அமைப்பில் சகலதும் சமமே என்பதால் இக்கோரிக்கையை என்னால் ஏற்க முடியவில்லை'' என்றார் அவர்.

ஏழு நாடுகளினது தலைவர்களும் ஆக்கபூர்வமானதும், அனுகூலமானதுமான சூழ்நிலையுடன் கூடிய தீர்வுகளில் ஆர்வம் கொண்டிருந்தனர்'' என்றும் திரு. காந்தி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்படி உச்சி மாநாட்டிற்கு மிக உயர்ந்த நம்பிக்கையுடன் வந்தோம். புதிய நம்பிக்கையையும் நாம் பார்த்து விட்டோம்'' என்றும் பாரதப் பிரதமர் கூறினார்.

இன்று

புத்தூரில் கருத்தரங்கு

இலங்கை சிறுவர் பல் பாதுகாப்பு சங்கமும், சிறுவர் செயலகமும், யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும் இணைந்து நடாத்தும் ''பல் பாதுகாப்பு'' கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை காலை புத்தூரில் உள்ள கோப்பாய் கல்வி மூலவள நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறுகின்றது.

பூசைப்பலி

பாசையூர் புனித அந்தோனியார் கோவிலில் மறைந்த உரிமைகள் தின பூசைப்பலி இன்று மாலை ஐந்து மணிக்கு நடைபெறும்.

பாதுகாப்பு...

ஹக் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று முற்பகல் 11-20க்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைவார்.

ஐந்து தினங்கள் இலங்கையில் தங்கியிருக்கும் ஜெனரல் ஹக் தம் குழுவினரும் அனுராதபுரம், கண்டி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்வார்கள்.

ஐந்து இளைஞர்....

மாலை கைதான ஒன்பது இளைஞர்களில் ஐவர் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டனர். வீடியோப் படம் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்புகையில் இவர்கள் கைதாகினர். நான்கு இளைஞர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளது சம்பந்தமாக இளைஞர்களின் உறவினர்கள் கிளிநொச்சி பிரஜைகள் குழுவிடம் புகார் செய்துள்ளனர்.

ராணுவ....

போது இரவு நேரமானதால் ஆனையிறவில் தமது உறவினர் வீட்டுக்கு அருகில் நிறுத்திவிட்டு சாரதி அதனுள் படுத்துவிட்டாராம். அதிகாலை ஐந்து மணியளவில் திடீரென மோதிய சத்தம் கேட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து சீருடையினர் அருகில் இருந்த வீடுகளில் உள்ளவர்களை எழுப்பி, பயப்படாது வெளியே வரும்படியும் இச்சம்பவத்தையும் கூறினர்களாம். காயமடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்ப தாம் உதவி செய்வதாகவும் அவர்கள் கூறிச் சென்றனராம். அயலில் உள்ளவர்கள் வீதியால வந்தவர்களின் உதவியுடன் சாரதியை வெளியே எடுத்தனர். லொறியின் முன்பகுதி பலத்த சேதமடைந்ததால், அதன்உடைந்த பகுதிகளைப் பிளந்தே சாரதி வெளியே எடுக்கப்பட்டார்.

நாவற்குழி ...

சீருடையினர் ஒருவரின் துப்பாக்கி வெடித்ததால் மற்றொரு சீருடையினர் சிறுகாய மடைந்ததாகவும் தெரியவந்துள்ளது. பரவலாக நடைபெற்ற சூட்டினால் மூவர் மரணமானதாகவும் தெரிய வந்துள்ளது.

நேற்று நாவற்குழியினூடாக செல்லும் வாகனப் போக்குவரத்துகளும் கோப்பாய் வழியாகவே நடைபெற்றன. நேற்றைய யாழ் தேவியும் ஒரு மணி நேரம் தாமதமாகவே யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டது. நாவற்குழிப் பகுதியிலுள்ள வர்களும் வீடுகளை விட்டு இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.

மனித உரிமை...

யும் இவ்வேளை, இவ்விரட்டை வேடத்தனை அமபலப்படுத்தும் வகையில் தமிழீழப்பகுதிகளில் மேறகொள்ளபடும் துக்க தினத்தோடு எம்மை ஆணைத்துக்கொள்வதினூடாக சாவதே அரங்கில் ஸ்ரீலங்கா அரசினை தனிமைப்படுத்தும் பணியில் ஒருபடி முன்னேறுவோம்'' எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாகர் கோவிலடியில்....

முட்கம்பிகள், மரக்குற்றிகளை ஏற்றிக் கொண்டு சென்ற ஐந்து பாரிய லொறிகளும் முள்ளிச்சந்தியை நோக்கி சென்றபோது அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

காலை சுமார் ஏழு மணியளவில் முள்ளிச் சந்தைப் பக்கமிருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் சில நிமிட நேரமாகக் கேட்டது.

காலை சுமார் பத்து மணியளவில் எட்டு கவச வாகனங்கள் ஆலயச்சந்தி மண்டான் ஊடாக தொண்டமானாறு திரும்பின.

தென்னைபிரிக்கா...

...1ஆம் பக்கத் தொடர்

ஒப்பந்தம் அமுலிலுள்ள போதிலும் இராணுவ முகாம்களில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யபபட்டு, காவலில் வைக்கப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டு வருவதாகவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டுநகர்....

நாவற்குடாவில் தேங்காயுடன் ஒரு லொறியும், நாற்பத்தையாயிரம் ரூபா பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நகை அடகுவைத்தோரின் வங்கி மறியல் போராட்டம் திங்கள் மீண்டும் ஆரம்பம்

கற்போது ஒய்வூதியம் வழங்கப்படுதல், சங்கானையில் கொள்ளைபோன நகைகளுக்கான காசுவிநியோகம்போன்ற தவிர்க்க முடியாத காரணங்களால் அடகு வைத்தோரின் மக்கள் வங்கி முன்பான காலவரையற்ற மறியற் போராட்டம் அடுத்த பதினைரும் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என அடகு வைத்தோர் சங்கம் அறிவித்துள்ளது.

அன்றைய தினம் வடபகுதியின் சகல மக்கள் வங்கிகிளைகள் முன்பாக இம்மறியற் போராட்டம் நடைபெறவிருப்பதால் சகல நகை அடகு வைத்த வாடிக்கையாளர்களும் அவரவர் வங்கிகள் முன்பாக காலை ஏழரை மணிமுதல் பகல் பத்து மணிவரையும் இம்மறியற் போராட்டத்தில் பங்குபற்றுமாறு அடகு வைத்தோர் சங்கம் வேண்டியுள்ளது.

மேலும் இப்போராட்டத்தை யாழ்ப்பாணம் செயலகத்திற்கும் விஸ்தரிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையில் இருக்கும் விநியோக முறையான வாரம் அறுபது நகைகள் என்ற தொகையை அதிகரிக்கும்படி கேட்டு நிர்வாகத்துடன்தொடர்ந்து போராட திட்டமிட்டுள்ளது. இப்பிரச்சினைபற்ய சங்கம் கண்காணிப்புக்குழு உறுப்பினர் உட்பட பல்வேறு அமைப்புகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டுவரதுள்ளது.

நாவற்குழி ரயில் நிலையம் நேற்றுக் கடும் சோதனை

(கிளிநொச்சி)

நேற்றுக்காலை நாவற்குழி ரயில் நிலையத்தைச் சுற்றி வளைத்த ஆயுதப்படையினர், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற யாழ் தேவியை சுமார் இரண்டு மணிதியாலங்களாக அங்கு மறித்து வைத்திருந்தனர். இதனால் ரயில் பயணிகள் பெரும் பதற்றமடைந்து காணப்பட்டனர். நாவற்குழி புகையிரத நிலைய அதிபர் விசாரணைக்குட்படுத்தப் பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இதனால் கொழும்பு சென்ற யாழ்தேவி ரயில் தாமதமாகவே புறப்பட்டுச் செல்ல நேர்ந்தது.

ஆங்கில ஆசிரியர் பயிற்சி 21ம் திகதி ஆரம்பமாகும்

முன்னர் அறிவிக்கப்பட்டது போல யாழ். மாவட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி நாளை 11ம் திகதி ஆரம்பமாகமாட்டாது என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, சாவகச்சேரி, மானிப்பாய், காங்கேசன்துறை கல்வி வட்டார ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிறசி இம் மாதம் 21ம் திகதி முதல் 24ம் திகதி வரை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

மறறைய வட்டார ஆசிரியர்களுக்கு அடுத்தாண்டு ஜனவரியில் நடத்தப்படும்.

சந்தேக நபர்

(வண்ணார்பண்ணை)

நேறறு முன்தினம் யாழ். மெயின் வீதியில் உள்ள தேனீர் கடை ஒன்றில் வைத்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் சில இளைஞர்களால் கடத்திச் செலலபபட்டார்.

தையல் தொழிலாளர் ஐக்கிய முன்னணி

(வண்ணார்பண்ணை)

தையல் தொழிலாளர்களின் ஐக்கியத்தையும் சமபல முரண்பாட்டை சமப்படுத்துவதையும் கருத்திற்கொண்டு தையல் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்காக ''வடமாகாண தையல் தொழிலாளர் ஐக்கிய முன்னணி'' ஒன்றை யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் நிர்வாகிகளாக, தலைவர்: ஏ. ஏ. சலீம், செயலாளர்: பி. ஹாமிம், தனுதிகாரி; எம். யே. நிஸார், இவர்களுடன் ஏழு பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுளளது.

நயினாதீவில் ஓர் சாதனை

(புங்குடுதீவு)

இவ்வாண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் நயினாதீவு மகாவித்தியாலய மாணவர்கள் புதிய தோர் சாதனையை நிலைநாட்டியுள்ளனர். கணக்கியல், இந்து நாகரிகம் ஆகிய இரு பாடங்களுக்கும் தோற்றிய அனைத்து மாணவர்களுமே சித்தி பெற்றுள்ளனர்.

இவ்வித்தியாலயத்திலிருந்து இமமுறை 23 மாணவர்கள் இப்பரீடசைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் 15 பேர் நான்கு பாடங்களில் சித்தி பெற்றுள்ளனர்.

சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ்

தாபனத்தின்

ஈழமுரசு, செய்திக்கதிர்

ஆகியவற்றின் சகோதர வெளியீடாக

புதியதொரு இலக்கிய மாத இதழ்

அருந்ததி

1986 பொங்கல் அன்று

வெளிவருகிறது.

படைப்பாளிகள் அனைவரும் கொடர்பு

கொள்ளவேண்டிய முகவரி:

கௌரவ ஆசிரியர்

அமிர்தகங்கை

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 10-12-1985 செவ்வாய்கிழமை அதிகாலை வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336